# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.117/2024

dated : 19.02.2026

D.W.1

Name மாரிமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன். வாதியை எனக்கு முன்னதாக தெரியாது. போலீசார் விசாரணைக்கு வந்தபின்னர்தான் எனக்கு தெரியும். வாதியின் மனைவி பெயர் லதா அவரை எனக்கு தெரியும். நான் சென்னையில் குடியிருந்த குடியிருப்பு வளாகத்தில் வாதியும் குடியிருந்தார். என் மகனும், வாதியின் மகனும் மருத்துவக் கல்லூரியில் வகுப்பு தோழர்கள். என்னுடைய மனைவி பெயர் கலா. என் மனைவியும், வாதியின் மனைவியும் நெருங்கிய நண்பர்கள். நான் தென்காசி எல்.ஐ.சி. கிளையில் பணிபுரிந்து வருகிறேன். அதனால் நான் சென்னைக்கு செல்லும்போது வாதியின் மனைவியை அறிமுகம் உண்டு. என்னை எல்.ஐ.சி. டெவலப்மெண்ட் ஆபிசர் என்று என் மனைவி அறிமுகப்படுத்தியுள்ளார். நான் லதா என்பவரிடம் எல்.ஐ.சி. யில் சிறப்பு திட்டங்கள் உள்ளது அதில் பயனாளராக சேரும்படி லதா என்பவரிடம் கூறி வந்தேன் என்றால் சரியல்ல. நான் லதா என்பவரிடம் எல்.ஐ.சி. திட்டத்தின் அடிப்படையில் பயனாளியாக

சேரும்படி கூறி அவரிடம் அறிமுகமானேன் என்றால் சரியல்ல. தற்போது வழக்கிற்காக அதனை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. லதாவின் கணவர் மாவட்ட நிர்வாக அளவில் பணிபுரிபவர் என்பதாலும் லதாவும் வசதியான பொருளாதார பின்புலம் கொண்டவர் என்பதாலும் அவரிடம் எல்.ஐ.சி. திட்டத்தில் சேர்வதற்கு போதிய வாய்ப்புள்ளது என்று கருதி நான் அவரிடம் பயணாளியாக சேரும்படி தொடர்ந்து வற்புறுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. லதாவின் கணவர் விரைவில் ஓய்வு பெற இருப்பதாக கூறி ஓய்வூதியத் திட்ட பயன் பெறுவதற்காக லதா எல்.ஐ.சி. திட்டத்தில் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு திட்டத்தில் சேர்வதற்காக லதா என்பவரிடம் எல்.ஐ.சி. படிவங்களில் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. லதா எனக்கு வங்கி பண பரிவர்த்தனை மூலம் பணம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான் அந்த தொகை எல்.ஐ.சி. திட்டங்களில் பயனாளியாக சேர்வதற்கு அனுப்பப்பட்ட தொகை என்றால் சரியல்ல. 15.07.2014 ம் தேதி ரூ.4,50,000/- லதாவுடைய இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கிலிருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதேபோலவே 02.08.2014 அன்று ரூ.25000/- அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 26.08.2014 ம் தேதி லதாவின் மதுரை செண்ட்ரல் வங்கி கிளையிலிருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு ரூ.6,00,000/- அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். மொத்தமாக ரூ.10,75,000/- அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தொகைகளை பெற்றுக் கொண்டபின்னர் லதாவின் பெயரில் எல்.ஐ.சி. திட்டங்களில்

பயனாளியாக சேர்த்து முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் எல்.ஐ.சி. பாலிசி பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும் என்று கூறினேன் என்றால் சரியல்ல. அவர் அனுப்பிய தொகையை என்னிடம் ரொக்கமாக திரும்ப பெற்றுக் கொண்டார். நான் அவ்வாறு ரொக்கமாக பணம் கொடுத்தேன் என்பதற்கு என்வசம் ஆவணங்கள் இல்லை. நான் அவ்வாறு கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. மேலும் எல்.ஐ.சி. யில் சிறப்பு திட்டம் உள்ளது என்றும் அதில் ரூ.15,00,000/- முதலீடு செய்தார் மாதந்தோறும் ரூ.80,000/- போனஸ் தொகையாக கிடைக்கும் என்றும் கூறி மேற்படி தொகையை மதுரையில் உள்ள லதாவின் வீட்டில் வைத்து 02.09.2014 ம் தேதி ரொக்கமாக ரூ.15,00,000/- பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. அதன்பின்னர் நான் அளித்த வாக்குறுதிப்படி எல்.ஐ.சி. பத்திரங்கள் அவருக்கு சென்றடையவில்லை என்று கேட்டபோது எல்.ஐ.சி. பத்திரங்கள் கல்கத்தாவில் உள்ள தலைமை அலுவலகத்திலிருந்து வருவதற்கு தாமதமாகிறது என்று நான் காரணம் கூறி தவிர்த்து வந்தேன் என்றால் சரியல்ல. மேலும் வலியுறுத்தி கேட்டபோது என்னை நம்புங்கள் விரைவில் பத்திரங்களை ஒப்படைத்துவிடுகிறேன் என்று கூறி நான் பெற்ற தொகைக்கு ஆதரவாக ரூ.4,50,000/-க்கு எனது HDFC வங்கி கிளையிலிருந்து பணமாக்கதக்க காசோலையை வழங்கினேன் என்றால் சரியல்ல. காசோலை என்னுடையதுதான் அதிலுள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். அதில் குறிப்பிட்டுள்ள தொகை என்னால் எழுதப்பட்டதுதான். அதற்கு மேல் உள்ள தேதி மற்றும் பெயர் விவரம் என்னால் நிரப்பப்பட்டதல்ல. அந்த

காசோலை **வா.சா.ஆ.21** ஆகும். வங்கி காசோலை பணமாக்கப்படவில்லை எனில் அதற்காக தொகை வங்கியால் பிடிக்கப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.21 காசோலைக்கு வங்கியால் பிடிக்கப்பட்ட தொகை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. ஏனென்றால் நான் 2018 ம் ஆண்டு மேற்படி வங்கி கணக்கை கையாளவில்லை. நான் அந்த காசோலையை 2014 ல் லதாவிற்கு வழங்கியிருந்தேன் அந்த காசோலைதான் வா.சா.ஆ.21 ஆகும். நான் எம்.எஸ்.சி படித்துள்ளேன். தற்போது எல்.ஐ.சி. யில் பணிபுரிந்து வருகிறேன். எல்.ஐ.சி. நிறுவனம் வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் பெற்று கோரிக்கைதாரர்களுக்கு பணம் கொடுத்து கையாளும் ஒரு நிறுவனம் என்றால் சரிதான். அவ்வாறு பொறுப்புமிக்க நிறுவனத்தில் பணிபுரிவதால் நிறுவனத்தின் சார்பில் செய்யப்படும் வேலைகளுக்கு முறையாக ஆவணங்கள் பெறுவது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு பொறுப்புமிக்க பணியில் இருப்பதால் நான் ரூ.4,50,000/-யை ரொக்கமாக திருப்பி கொடுக்கும்போது அதற்கு உரிய ஆவணங்களை பெற்றுக்கொள்ளாமல் கொடுத்தது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. நான் எல்.ஐ.சி. முதலீடு செய்திருப்பதாகவும் அதன் துணை நிறுவனமான நிர்மல் பேங்க் என்ற நிதிநிறுவனத்திலிருந்து டிவிடென்ட் தொகை வந்துள்ளதாகவும் லதாவிடம் கூறினேன் என்றால் சரியல்ல. நிர்மல் வங்கி எனப்படும் வங்கி மும்பையை தலைமையிடமாக கொண்ட வங்கி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. லதாவிடமிருந்து பெற்ற தொகையை எல்.ஐ.சி. முதலீடு செய்யாமல் நிர்மல் வங்கியில் முதலீடு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 எல்.ஐ.சி.

யிலிருந்து அனுப்பப்பட்ட கடிதம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மற்றொரு கடிதம் அவ்வாறு எல்.ஐ.சி. யிலிருந்து அனுப்பப்பட்டதா என்றால் என்னால் உறுதியாக கூற இயலாது. மேற்படி கடிதத்தில் இரத்தினகுமார் என்பவர் நிர்மல் பேங்கில் பணிபுரிந்து வருகிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். லதா தனக்கு எல்.ஐ.சி. பத்திரங்கள் கிடைக்கப்பெறவில்லை என்று தலைமை அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தலைமை அலுவலகம் பாலசுப்பிரமணியம் என்பவரை விசாரணை அலுவலராக நியமித்து அவர் மூலம் ஒரு அறிக்கை பெற்றுள்ளனர் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. பாலசுப்பிரமணியம் நடத்தியதாக கூறப்படும் விசாரணையில் நான் கலந்து கொள்ளவில்லை. நான் பாலசுப்பிரமணியம் நடத்திய விசாரணையில் கலந்து கொண்டேன் என்றும், அந்த விசாரணையில் நான் லதா என்பவரிடம் வாங்கிய தொகை எல்.ஐ.சி. நிறுவனத்திற்காக பெறப்பட்ட தொகையல்ல என்றும், இரத்தினகுமார் என்பவர் நடத்திவரும் நிர்மல் பேங்க் என்ற வங்கியில் முதலீடு செய்வதற்காக பொறுப்புநிலை ஏற்றுக் கொண்டு செய்து கொடுத்ததாக நான் கூறியதாக பாலசுப்பிரமணியம் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எல்.ஐ.சி. நிறுவனத்திலிருந்து விசாரிக்கப்பட்ட அலுவலர் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும்போது நான் எல்.ஐ.சி. நிறுவனம் சார்பில் நடத்தப்பட்ட விசாரணையில் கலந்துகொண்டதாக சா.சா.ஆ.9 ல் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான் அது தென்காசி அலுவலகத்தில் வைத்து

என்னை விசாரித்தபோது நான் கூறிய தகவல் ஆகும். அவ்வாறு விசாரித்தபோது நான் லதாவிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதாகவும் ரூ.10,75,000/- யை திரும்ப கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சா.சா.ஆ.8 அறிக்கை அப்போது நடைபெற்ற விசாரணை அறிக்கை என்றால் சரிதான். அதில் நான் விசாரணையில் பங்கெடுத்துக் கொண்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மீது எங்கள் நிறுவனத்தின் சார்பில் நடவடிக்கை துவக்கப்பட்டு பின்னர் விலக்கிக்கொள்ளப்பட்டது. எல்.ஐ.சி. ஒரு பொதுத்துறை நிறுவனம் என்றால் சரிதான். எனவே நான் பொதுத்துறை ஊழியர் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் நன்னடத்தை விதிகள் உண்டு. அந்த நன்னடத்தை விதிகளின்படி பணிபுரியும் காலத்தில் தனிப்பட்ட வங்கியில் பணப்பரிவர்த்தனைகள் வைத்துக் கொள்ளக் கூடாதென்றும் எல்.ஐ.சி. நிறுவன வியாபாரத்திற்கு விரோதமான வேலைகளில் ஈடுபடக் கூடாதென்று வழிகாட்டு விதிகள் உள்ளது என்றால் சரிதான். மேலும் டெவலப்மெண்ட் ஆபிசர் என்ற முறையில் கூடுதலாக சிறப்பு விதிகள் உண்டு. டெவலப்மெண்ட் ஆபிசரின் பணி என்பது எல்.ஐ.சி. நிறுவனத்தின் வியாபாரத்தை முகவர் மூலம் அதிகப்படுத்துவதற்கான பணியாகும். என்னிடம் காட்டப்படும் நடத்தை விதிகள் **வா.சா.ஆ.22** ஆகும். நான் எங்கள் மேல் அதிகாரிகளை தன்வயப்படுத்திக் கொண்டு நடவடிக்கை எடுக்காவிடாமல் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. லதா என்பவர் இறந்துபோனார் என்று தாமதமாக தெரியவந்தது கேள்விப்பட்டதுதான். லதாவின் கணவர் மதுரை காவல் துறையினரிடம் புகார் கொடுத்து அது தொடர்பான

விசாரணை தென்காசியில் நடைபெற்றபோது அந்த விவரத்தை தெரிந்து கொண்டேன். நானும், வாதியும் காவல் துறை விசாரணைக்கு ஆஜரானோம். அந்த விசாரணையின்போது ரூ.18,75,000/- பெற்றுக் கொண்டது உண்மை என்றும் அதை பங்கு மூலதனமாக செலுத்தினேன் என்றும் கூறினேன் என்றால் சரிதான் ஆனால் அது என்னை வற்புறுத்தி எழுதிப் பெற்றதாகும். நான் வழக்கறிஞருடன் விசாரணைக்கு ஆஜரானேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞருடன்தான் விசாரணைக்கு ஆஜரானேன் என்றும் தற்போது வேண்டுமென்றே அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் தன்னிச்சையாக எழுதிக் கொடுத்த வாக்குமூலம் என்று சொன்னால் சரியல்ல. என்னை வற்புறுத்தி எழுதிப் பெற்ற வாக்குமூலம் என்று காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு நான் புகார் எதுவும் அனுப்பவில்லை. போலீசார் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளும்படி என்னிடம் கூறினார்கள். என்னிடம் அவ்வாறு அறிவுரை கொடுத்த போலீசார் மிரட்டி வாக்குமூலம் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இரண்டாவது முறையும் என்னை போலீசார் விசாரித்தார்கள். அதன்பின்னர் போலீஸ் வழக்கறிஞர் மூலம் நான் அனுப்பிவைத்தேன். அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணைக்கு பின்னர் வாதிக்கு ரூ.4,50,000/-க்கு காசோலை கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2023 மார்ச் மாதம் ரூ.3,00,000/-மும் 01.08.2023 அதே வங்கியில் ரூ.1,00,000/- ஆக ரூ.4,00,000/- வாதிக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். ஆனால் அந்த தொகை கடன் தொகையல்ல

நான் காசோலையை திரும்ப கொடுப்பதற்காக கொடுத்த தொகையாகும். அந்த காசோலைதான் வா.சா.ஆ. 21 காசோலையாகும். நான் வழங்கிய வா.சா.ஆ.21 காசோலை லதாவிடம் வாங்கிய பணத்தை திரும்ப செலுத்துவதற்காக திரும்ப செலுத்திய காசோலை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் ரூ.4,00,000/- திரும்ப கொடுத்துவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல என்னை மிரட்டி வாங்கியுள்ளார்கள். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் ரூ.4,00,000/-மட்டும் கடன் பெற்றதாக கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மொத்தம் 3 அறிவிப்புகள் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அறிவிப்பில் ரூ.4,00,000/- பணம் அனுப்பியுள்ளதை ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் அறிவிப்பில் போலீசார் என்னை அழைத்து விசாரிக்கக் கூடாதென்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணைக்கு தன்னிச்சையாக ஆஜராகி வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வாதியின் அனைத்து விபரங்களுக்கும் பதில் அளிக்காமல் தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி லதாவின் கணவர் என்றால் சரிதான் அவர் லதாவின் சட்டப்பூர்வ வாரிசு என்றால் அது எனக்கு தெரியாது. லதாவின் அனைத்து வாரிசுகளும் வந்தால் பணம் கொடுப்பதாக அறிவிப்பில் ஏதும் கூறவில்லை என்றால் சரிதான். லதாவின் வாரிசு என்பதை ஏற்றுக் கொண்டுதான் வாதிக்கு ரூ.4,00,000/- கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனவே லதாவின் அனைத்து வாரிசுகளும் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் அல்ல என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள

வாரிசுரிமை சான்றே போதுமானது என்றும் நீதிமன்ற உத்தரவு ஏதும் அவசியமற்றது என்று சொன்னால் சரியல்ல. நான் மொத்தமாக ரூ.25,75,000/- லதாவிடம் பெற்றுள்ளேன் என்றும் அந்த தொகையை முழுவதுமாக திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் லதாவிடம் பெற்ற கடனிற்கு 2023ல் ஒருபகுதி தொகையை திரும்ப செலுத்தியுள்ளதால் என்னிடமிருந்து தொகையை திரும்ப கோரும் காலவரம்பு அற்றுப்போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஒப்புக்கொண்ட தொகை ரூ.18,75,000/-ல் ரூ.4,00,000/- கழித்துக் கொண்டது போக மீதித் தொகைக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல. நான் எங்கள் நிறுவன அலுவலர்களிடம் எனது செல்வாக்கை பயன்படுத்தி முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்கவிடாமல் தடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய அறிவிப்பில் கைமாற்றுக் கடனாக ரூ.4,000,00/- பெற்றுக் கொண்டதாக கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த விபரங்களை எனது எதிர் வழக்குரையிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். நான் லதாவிடமிருந்து எல்.ஐ.சி. நிறுவனதிட்டத்தில் முதலீடு செய்வதற்காக பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்வழக்குரை மற்றும் என்னுடைய எதிர்வாதம் நிராகரிக்கத்தக்கது என்றும் வாதி வழக்குரைப்படி தீர்ப்பாக வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.19 17:58:35 +0530